# உதயன்

விலை ரூபா 4-50

சுடர்: 6 திருவள்ளுவர் ஆண்டு 2022 ஆடி 15 புதன்கிழமை (31-07-1991) UTHAYAN — A Lively National Tamil Daily கதிர்: 239

## நேற்று முழு நாளும் உக்கிரச் சண்டை

# கடல் நீரேரிப் பகுதி ஊடாக

# இராணுவம் முன்னேறியது!

### திருமலையில் படை அதிகாரி பலி!

கொழும்பு, ஜூலை 31

திருகோணமலை மாவட்டத்தில் விடுதலைப் புலிகளின் துப்பாக்கிச் சூட்டுக்கு இலக்காகி இராணுவ அதிகாரி ஒருவர் பலியானார் என ஏஜென்ஸிச் செய்திகள் தெரிவித்தன.

இத்தாக்குதல்கள் குறித்து மேலதிக விவரங்கள் கிடைக்கவில்லை. [உ]

### வெள்ளத்தில் மூழ்கி 400 பேர் பலி!

பம்பாய், ஜூலை 31

மகாராஷ்டிர மாநிலத்தில் ஆறு ஒன்று பெருக்கெடுத்து அணையை உடைத்து ஓடியதில் நாக்பூர் என்னும் கிராமம் வெள்ளத்தில் மூழ்கியது. வெள்ளத்தில் சிக்கி 400 க்கும் அதிகமானோர் உயிரிழந்திருக்கலாம் என்று அஞ்சப்படுவதாகச் செய்திகள் தெரிவித்தன. [உ-எ]

## ஆனையிறவு தடைமுகாமிற்குப் பின்னால் அரைமைல் தூரத்தில் நேற்றிரவு படையினர்

யாழ்ப்பாணம், ஜூலை 31

வெற்றிலைக்கேணி — கட்டைக்காட்டுப் பகுதியில் தரையிறங்கி, புல்லாவெளியில் நிலைகொண்டிருந்த ஸ்ரீலங்கா படையினரில் ஓர் அணியினர் விடுதலைப் புலிகளின் கடும் எதிர்ப்புக்கு மத்தியில் நேற்றிரவு கடல் நீரேரிப் பக்கத்தால் ஆனையிறவு முகாமை நோக்கி கணிசமான தூரம் முன்னேறினர். நேற்றிரவு ஆனையிறவு தடை முகாமின் பின் பக்கத்தில் இருந்து சுமார் அரை மைல் தூரத்தில் இந்தப் படை அணி நிலை கொண்டிருந்தது.

புல்லாவெளியிலிருந்து வாடியடிச் சந்தியூடாக முன்னேற முயன்ற மற்றொரு படை அணி புலிகளின் பெரும் தாக்குதலினால் முன்னேற முடியாது வாடியடிச் சந்தியிலேயே நிலைகொண்டிருப்பதாகத் தெரிய வருகிறது.

நேற்றுக் காலை புல்லாவெளியில் இருந்து படையினர் இரு அணிகளாக ஆனையிறவு நோக்கி முன்னேற முயன்றனர்.

இரு அணிகள் மீதும் விடுதலைப் புலிகள் கடும் தாக்குதல்களை நடத்தினர்.

வாடியடிச் சந்தியூடாக முன்னேற முயன்ற படை புலிகளின் தாக்குதலினால் அந்தச் சந்திப் பகுதியிலேயே நிலை கொண்டது.

கடல் நீரேரி கரையை அண்டி முன்னேறிய படையினர் மீதும் உக்கிரத் தாக்குதல் நடத்தப்பட்டது.

பெரும் இழப்புகளுடன் — எண்ணிக்கை குறிப்பிடப்படாத அளவு படையினரை இழந்த நிலையில் — அந்த அணி கணிசமானளவு தூரம் முன்னேறியது.

நேற்றிரவு ஆனையிறவு

(4ஆம் பக்கம் பார்க்க)

### நாளை முதல் ரூபா 5-00

பத்திரிகை அச்சிடுவதற்குத் தேவையான சகல மூலப் பொருள்களுக்கும் மற்றும் உப பொருள்களுக்கும் மிகப் பெரும் தட்டுப்பாடு நிலவுவதை வாசகர்கள் அறிவார்கள்.

இப்போது நிலைமை மேலும் மோசமாகி விட்டது. அதனால் எமது கட்டுப்பாட்டுக்கு அப்பாற்பட்ட நிலையில், உதயனின் விலையை ஐம்பது சதத்தால் உயர்த்த வேண்டியது தவிர்க்க முடியாததாகி விட்டது.

நாளை முதல் உதயனின் விலை 5 ரூபாவாகும்.

நிலைமையைப் புரிந்து கொண்டு, கடந்த காலங்களைப் போல எமக்கு ஆதரவும், ஒத்துழைப்பும் நல்குமாறு வாசகர்களை மிக அன்புடன் கேட்டுக்கொள்கிறோம்.

— நிர்வாகிகள்

## இடம் பெயர்ந்தவர்களுக்கு மேலும் 2 வார நிவாரணம்

யாழ்ப்பாணம், ஜூலை 31

யாழ். மாவட்டத்தைச் சேர்ந்த இடம்பெயர்ந்த குடும்பங்களுக்கும், ஆயிரத்து 500 ரூபாவுக்கு உட்பட்ட வருமானம் பெறும் குடும்பங்களுக்கும் மேலும் இரு வாரங்களுக்கு இலவச உலர் உணவு விநியோகிக்க முடிவு செய்யப்பட்டுள்ளது.

உலர் உணவு விநியோகம் தொடர்பான கூட்டம் நேற்று யாழ். செயலகத்தில் நடைபெற்றது. அந்தக் கூட்டத்திலேயே மேற்கண்ட முடிவு எடுக்கப்பட்டுள்ளது.

ஆயிரத்து 500 ரூபாவுக்கு மேற்பட்ட வருமானம் பெறுகின்ற குடும்பங்களுக்கு இரு வாரங்களுக்கு கட்டுப்பாட்டு விலையில் உலர் உணவு விநியோகிப்பது என்றும் கூட்டத்தில் தீர்மானிக்கப்பட்டது.

செயலகத்தின் கையிருப்பில் உள்ள உணவுப் பொருள்களின் அளவு அதிகரிக்குமிடத்து தொடர்ந்து அடுத்தடுத்த வாரங்களுக்கும் மேற்படி உலர் உணவு நிவாரண விநியோகத்தை நீடிப்பது குறித்து முடிவு எடுக்கப்படும் என செயலக வட்டாரங்கள்

[4 ஆம் பக்கம் பார்க்க]

## மீட்பு அணி முகாம் வந்து சேர்ந்தாலும்

# ஆனையிறவை படையினர் தக்க வைப்பது கடினமே!

யாழ்ப்பாணம், ஜூலை 31

ஆனையிறவு தடை முகாமிற்குப் பின்னால் — அரை மைல் தூரத்தில் — நிலை கொண்டிருக்கும் ஸ்ரீலங்கா இராணுவத்தின் மீட்புப் படை அணி தடை முகாமிற்குள் பிரவேசித்தாலும்—

ஆனையிறவு முகாமை ஸ்ரீலங்கா இராணுவம் தொடர்ந்து தக்க வைத்துக் கொண்டிருப்பதோ அல்லது வெற்றிலைக்கேணி, கட்டைக்காட்டுப் பகுதியூடாக ஆனையிறவு முகாமுக்கு தொடர்ந்து உணவு மற்றும் பொருள்களை விநியோகிப்பதோ இலகுவான காரியமல்ல என்று சுட்டிக் காட்டப்படுகிறது.

முகாம் மீதான புலிகளின் தாக்குதல் தொடரும் என்றும்—

(2ஆம் பக்கம் பார்க்க)

## அரசியல் தீர்வே வழி! இரு நாடுகளும் தீர்மானம்

புதுடில்லி, ஜூலை 31

இனப்பிரச்சினைக்கு அரசியல் தீர்வு ஒன்றே காணப்படவேண்டும் என்று இலங்கையும் இந்தியாவும் மீண்டும் ஏற்றுக் கொண்டுள்ளன என்று புதுடில்லியில் நேற்று அறிவிக்கப்பட்டது.

நேற்று இலங்கை — இந்திய வெளியுறவு அமைச்சர் மட்டத்தில் நடந்த பேச்சுகளின் போது இந்த தீர்மானம் எடுக்கப்பட்டது.

தமிழகத்தில் உள்ள இலங்கைத் தமிழ் அகதிகள் தாமாகவே தமது சொந்த இருப்பிடங்களுக்குத் திரும்புவதை ஊக்குவிக்கும் நடவடிக்கைகளை மேற்கொள்வது என்று இரு நாடுகளும் நேற்று கூட்டாக முடிவு செய்தன. [உ-எ]

## இளைஞர்களே அணி சேருங்கள்!

# மக்கள் அணி திரள்வதிலேயே நம் வெற்றி தங்கியிருக்கிறது!

### காயமுற்ற நிலையில் யாழ். தளபதி தினேஷ் பேட்டி

யாழ்ப்பாணம், ஜூலை 31

போராட்டத்துக்காக, மக்கள் அணி திரள்வதில்தான் யுத்தத்தின் வெற்றி தங்கி நிற்கின்றது.

இளைஞர்களே இணையுங்கள்! வீழும் ஆயுதங்களை தூக்க முன்வாருங்கள்!!

—இவ்வாறு அறைகூவல் விடுத்தார் விடுதலைப் புலிகளின் யாழ். மாவட்டத் தளபதி திரு. தினேஷ்.

ஆனையிறவு யுத்தத்தில் காயமடைந்த அவர், நேற்றுக் காலை பத்திரிகையாளர்கள் சந்தித்தபோது மிகவும் களைப்புற்றுக் காணப்பட்டார். காயம் இன்னும் முற்றாக ஆறாத நிலையில் பேசுவதற்கு மூச்செடுக்கவே பெரும் சிரமப்படுவதை அவதானிக்க முடிந்தது. [illegible] துளைத்திருந்த தோள்மூட்டில் கொதி - வலி அடங்காததால் போலும் தாழ்ந்த குரலிலேயே உரையாடினார். எனினும் ஒரு தளபதிக்கு உரிய துடிப்பும், கம்பீரமும் மாறவில்லை. உடற்களைப்பு இருந்தாலும் வீரக்களை கலையவில்லை.

அவர் மேலும் தெரிவித்ததாவது:- [illegible] யுத்தம் மிகப்பெரிய போர்

[3 ஆம் பக்கம் பார்க்க]

## ரவிஜெயவர்த்தனா தலைமையிலான

# ஸ்ரீலங்கா கூலிப்படையின் ஐந்து பேர் தமிழகத்தில்!

### மத்திய புலனாய்வுக் குழு உஷார்

சென்னை, ஜூலை 31

ஸ்ரீலங்காவில் ரவி ஜெயவர்த்தனா தலைமையில் இயங்கும் கூலிப்படை ஒன்றைச் சேர்ந்த ஐவர் கடந்த ஜூன் 20 ஆம் திகதியளவில் தமிழகம் வந்துள்ளனர்!

மகாபலிபுரம் பகுதியில் ஈழப் போராளிகள் இருவர் மர்மமான முறையில் உயிரிழந்து கிடந்த சம்பவத்துக்கு

(4ஆம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சின்னஞ்சிறு விளம்பரம்

### விற்பனைக்கு

தமிழ் (புதிய விசைப் பலகை) ஆங்கிலம் (Standards-Portables) தட்டச்சு இயந்திரங்கள் நல்ல நிலையில் விற்பனைக்கு உண்டு. Fudo, 39/17, மின்சார நிலைய வீதி, 3 ஆம் ஒழுங்கை, யாழ்ப்பாணம். (பஸ் நிலையம் முன்பாக, Shabra அருகாமையில்) (சி/0273)

### வெளிவந்து விட்டது

வெளிவந்து விட்டது. 10 ஆம், 11ஆம் ஆண்டுக்கான ''தமிழ் இலக்கியம் சந்தர்ப்பம் கூறல்'' By செ. கதிர்காமத்தம்பி B.A., யே. அமலசீலன் B. A. பரியோவான் கல்லூரி, யாழ்ப்பாணம். வியாபாரிகளுக்கும், கல்லூரிகளுக்கும் விசேஷ கழிவு. விற்பனை; பூபாலசிங்கம் புத்தகசாலை, யாழ்ப்பாணம். (சி-0274)

### மில்க்வைற் திரவ சவர்க்காரம்

மில்க்வைற் திரவ சவர்க்காரம் (Liquid Soap) சகல தேவைகளுக்கும் உதவுகிறது. அரைப்போத்தல் ரூபா 45/- பாவித்த வெற்றுப்போத்தல் லேபலுடன் திருப்பித் தந்தால் ரூபா 2/- கழிவு. ''மில்க்வைற்'' யாழ்ப்பாணம். (சி-0318)

### தவறிவிட்டது

பொன்னம்பலம் கந்தையா ஆகிய எனது அடையாள அட்டை [440752799 V] 15-7-91 இல் கச்சேரிக்கும், செஞ்சிலுவைச் சங்கத்திற்கும் இடையில் தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் தயவு செய்து உதயன் காரியாலயத்தில் ஒப்படைக்கவும். தகுந்த சன்மானம் வழங்கப்படும். [17647]

## ஓய்வூதியர்கள் சந்திப்பர்

ஓய்வூதியர் சங்கங்களின் சம்மேளனம் இன்று புதன் கிழமை காலை 10-30 மணிக்கு யாழ். அரசாங்க அதிபரைச் சந்திக்க உள்ளது.

அரச அதிபரிடம் மகஜர் ஒன்றும் சமர்ப்பிக்கப்படும்.

இது தொடர்பாக இன்று காலை 9-30 மணிக்கு யாழ். வை. எம். சி. ஏ. கட்டடத்தில் ஓய்வூதியர் சங்கப் பிரதிநிதிகளைக் கூடும்படி ஓய்வூதியர் சங்கங்களின் சம்மேளனச் செயலாளர் திரு. பி. எஸ். திருச்செல்வம் கோரி உள்ளார்.

குடாநாட்டில் உள்ள பல் வேறு ஓய்வூதியர் சங்கங்களும் இணைக்கப்பட்டு சம்மேளனம் ஒன்று உருவாக்கப்பட்டுள்ளது. [இ-த]

## ஆனையிறவை...

[1 ஆம் பக்கத் தொடர்ச்சி]


வெற்றிலைக்கேணிக்கும் ஆனையிறவுக்கும் இடையில் சங்கிலித் தொடர்போல நிலைகொண்டிருக்கும் இராணுவ அணி புலிகளின் தாக்குதல்களினால் அடிக்கடி நிலை குலையும் போது ஆனையிறவு முகாம் மீண்டும் தனித்துப் போகும் நிலை ஏற்படும் என்றும் தெரிவிக்கப்பட்டது.

மீட்புப் படை அணி ஆனையிறவு முகாமுக்குள் பிரவேசித்தாலும் அந்த அணியுடன் சேர்த்து ஆனையிறவு முகாம் முற்றுகைக்குள்ளாகும் வாய்ப்புகளும் அதிகம் உண்டு எனச் சுட்டிக்காட்டப்படுகின்றது.

உள்ளூரில்
உற்பத்தி
விடுதலைக்கு
உயிர்நாடி.

## கண்ணீர் அஞ்சலி

27—07—91 இல் ஆனையிறவு இராணுவ முகாம் தகர்ப்பு முயற்சியின் போது வீரமரணமடைந்த



வீரவேங்கை

### லெப். கேணல் சரா

(சின்னத்துரை ஜீவராசா, கல்வியங்காடு)

மண்ணில்: 19 - 04 - 1962

தாயக மீட்பில்: 27 - 07 - 1991

இவரது பிரிவால் துயருறும்
அவரது குடும்பத்தினருக்கும் ஆழ்ந்த அனுதாபங்கள்.

இவருடன் வீரமரணமடைந்த ஏனைய
போராளிகளுக்கும் எமது அஞ்சலியை
தெரிவித்துக் கொள்கிறோம்.

ந. துரைசிங்கம் – றஞ்சிதமலர்
குடும்பம்.

[17645]

## 41ஆம் நாள் நினைவும் இரங்கல் திருப்பலி அழைப்பும்

மலர்வு: 1923 — 06 — 24



உதிர்வு: 1991 — 06 — 21

அமரர்

### ஆசீர்வாதம் சுவாம்பிள்ளை

[நாட்டுக் கூத்து அண்ணாவியார்]

யாழ். குருநகரைச் சேர்ந்த ஆசீர்வாதம் சுவாம்பிள்ளை [பிரபல நாட்டுக்கூத்து அண்ணாவியார்] 21-06-1991 இல் இந்திய தமிழகத்தில் காலமானார்.

இவர் பாக்கியத்தின் அன்புக் கணவரும், செல்வராணி, அரசராணி, அரியராசா, யோகராசா, பவளராணி, ஜெயராணி, யேசுரெத்தினம் (பிரான்ஸ்), சகாயராணி, எமலினம்மா, பற்குணம், அழகேந்திரன் ஆகியோரின் அன்புத் தந்தையும், செல்லம்மா, செல்வசிங்கம் ஆகியோரது அருமைச் சகோதரருமாவார்.

அன்னாரின் ஆத்ம சாந்திக்காக 01 - 08 - 1991 வியாழக்கிழமை காலை 6 மணிக்கு புனித மரியாள் பேராலயத்தில் இரங்கல் கூட்டுத் திருப்பலி ஒப்புக்கொடுக்கப்படும். இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் ஏற்று, இரங்கல் திருப்பலியில் கலந்து அவரது ஆத்மசாந்திக்கு இறைஞ்சுமாறுவேண்டுகிறோம்.

பிரிவால் துயருறும்:
பிள்ளைகள்.

9/4, மத்திய கிழக்கு வீதி,
குருநகர், யாழ்ப்பாணம். (சி-0317)

## இந்தியாவிடம் ஸ்ரீலங்கா இராணுவ தளபாட உதவி?

லண்டன், ஜூலை 31

ஸ்ரீலங்கா வெளியுறவு அமைச்சர் ஹரோல்ட் ஹேரத் தமது புதுடில்லி விஜயத்தின் போது இந்திய அரசிடம் இராணுவ தளபாட உதவிகளைக் கேட்டிருக்கக் கூடும்.

ஸ்ரீலங்கா அரசியல் விமர்சகர் ஒருவரை மேற்கோள் காட்டி பி. பி. ஸி. இத்தகவலை நேற்றிரவு வெளியிட்டது.

''விடுதலைப் புலிகளுக்கு எதிரான போராட்டத்தில் வெற்றி பெறுவதற்காக ஸ்ரீலங்கா அரசு இந்திய அரசிடம் கணிசமான அளவு தளபாட உதவிகளைக் கேட்டிருக்க வாய்ப்புகள் உண்டு.

ஆனால் இராணுவத்தினரின் நேரடி உதவியை ஸ்ரீலங்கா அரசு கேட்டிருக்க மாட்டாது'' — இவ்வாறு அந்த விமர்சகர் பி. பி. ஸிக்குத் தெரிவித்தார். (உ)

## ஓராண்டு நினைவஞ்சலி

தோற்றம்: 08 — 04 — 1947



மறைவு: 11 — 08 — 1990

### செல்வி திலகவதி இராஜகோபால்

(சாந்தா)

ஆண்டுத் திதி: 31 — 07 — 1991

திராத கவலையுடன் நாமிங்கு புலம்பி நிற்க
வாராத இடத்திற்குச் சென்று விட்ட எம் அன்பே
ஓராண்டு காலம் ஓடி மறைந்தாலும்
சீரான உன் நினைவு எமை விட்டு அகலாது.

ஓம் சாந்தி!

உன் பிரிவால் துயருறும்:
அம்மா, அம்மம்மா,
சகோதரிகள், மைத்துனர்கள்,
பெறாமக்கள், சித்தி, மாமாமார்,
உறவினர்கள்.

13/2, தலையாளி ஒழுங்கை,
கலட்டி,
யாழ்ப்பாணம். [17584]

## 3 ஆம் ஆண்டு நினைவஞ்சலி



### செல்வி ஜெயந்தி ஜெயரட்ணம்

(உடுவில், மகளிர் கல்லூரி மாணவி)

மலர்வு: 20 - 10 - 1969

உதிர்வு: 31 - 07 - 1988

அன்பு மகளே! அருமைத் தங்கையே!
வேதனைகளைத் தாங்கித் தாங்கி - இங்கு
வெந்து கொண்டிருக்குதம்மா எம்மிதயம்
கண்ணிரண்டும் கவலையால் நீர் சுரக்க - இங்கு
கணக்கற்றோர் உண்டு ஆனாலும்
அத்தனை பேரும் வாயுள்ள ஊமைகள் தான்.

உமது பிரிவால் வாடும்:
அப்பா, அம்மா, அண்ணாமார்.

உடுவில். (4222)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உதயன்

## வெற்றுப் பேச்சு

ஜனாதிபதி பிரேமதாசா கடந்த ஞாயிற்றுக்கிழமை கல்கிசை விகாரையில் நிகழ்த்திய அரசியல் பேச்சுக் குழப்பம் நிறைந்த ஒன்றாகும்!

ஈழத் தமிழர்களுக்கு எதிராக ஸ்ரீலங்கா அரசாங்கம் பாகுபாடு காட்டி வருவதையும், அவர்களுக்கு உள்ள குறைபாடுகள் நிவர்த்தி செய்யப்பட வேண்டும் என்பதையும் அவர் மிகப் "பெருந்தன்மை"யுடன் ஒப்புக்கொண்டிருக்கிறார் என்பது உண்மைதான்.

அண்மைக் காலத்தில் இந்த உண்மையை ஒப்புக்கொண்ட தென்னிலங்கையைச் சேர்ந்த தலைவர் பிரேமதாசா என்று அரசியல் விமர்சகர்கள் குறிப்பிட்டுக் கூறுகிறார்கள். 1977ஆம் ஆண்டில் ஐக்கிய தேசியக் கட்சி தனது தேர்தல் விஞ்ஞாபனத்திலேயே தமிழர்களுக்குக் குறைகள் உண்டு என்றும், அவற்றை நிவர்த்தி செய்வதற்குக் கட்சி பதவிக்கு வந்தால் நடவடிக்கை எடுக்கும் என்றும் கூறியிருந்தது. அதைத் தமிழர்கள் மறக்கவில்லை.

அந்த ஆண்டில் பதவிக்கு வந்த ஐ. தே. கட்சி, கடந்த பதினான்கு வருடங்களாகத் தொடர்ச்சியாக ஆட்சி அதிகாரத்தில் இருந்த போதிலும், தமிழர்களின் குறைபாடுகள் இன்னும் தீர்க்கப்படவில்லை. அதற்குப் பதிலாக இனப் பிரச்சினை மேலும் மோசமடைந்துள்ளது. சிங்களவர்களுக்கும், தமிழர்களுக்கும் இடையில் நேரடிப் போர் நடக்கும் அளவுக்கு பகைமை முற்றி உள்ளது.

இரு நாடுகளுக்கு இடையேயான யுத்தத்தைப் போல, ஆனையிறவுப் போர் நடந்து கொண்டிருக்கும் இவ்வேளையில், வடக்கு - கிழக்குப் பிரச்சினை சிக்கலானது என்று பிரேமதாசா கூறுகிறார். அந்தச் சிக்கல் என்ன என்பதையும் விவரித்திருக்கிறார்.

அதாவது இந்தச் சிக்கல் நிறைந்த பிரச்சினைக்கு அவரால், அவரது அரசால் ஒரு தீர்வை வகுக்க முடியவில்லை என்பதை அவர் உணர்த்தி இருக்கிறார். ஒப்புக் கொண்டிருக்கிறார்.

நாட்டின் மிக முக்கியமான, முதன்மையான பிரச்சினைக்குத் தீர்வு வகுக்க முடியாத ஓர் அரசாங்கமும், தலைவரும் தீர்வு ஒன்றை மற்றவர்களிடம் இருந்தே எதிர்பார்க்கிறார்கள். இது பெரும் வெட்கக்கேடானதும் அரசின் திறமையின்மையைப் பிரதிபலிப்பதுமானதாகும்.

அது ஒரு புறமிருக்க, இனப் பிரச்சினைக்கு எவ்வாறு தீர்வு காணலாம் என்று போயும் போயும் மகா சங்கத்திடம் அவர் ஆலோசனை கேட்டிருக்கிறார்!

தமிழர்களுக்கு இனி வழங்கப்படுவதற்கு எவ்வித உரிமையும் இல்லை. ஜே. ஆர். — ராஜீவ் ஒப்பந்தம் மூலம் உருவாக்கப்பட்ட மாகாண சபைத் திட்டமே நாட்டைத் தமிழர்களுக்கு அடகு வைத்துவிட்டதாக "அழுகுரல்" வைத்த மகா சங்கத்திடம் ஆலோசனை கேட்கிறார் என்றால்...!

பிரேமதாசா தமிழர் பிரச்சினைக்கு நியாயமான தீர்வைக் காண விரும்பவில்லை; காணப் போவதில்லை என்பதையே இந்த ஆலோசனை கேட்கும் படலம் தெளிவாக்குகிறது.

ஆகையால் அவர் தமிழர்களுக்கு எதிராகப் பாகுபாடு காட்டப்படுவதாக ஒப்புக் கொண்டிருப்பது வெறும் பம்மாத்தே அன்றி நன்நோக்கத்துடன் அல்ல.

ஆகையால் ஈழத் தமிழர்களைப் பொறுத்த வரையில் பிரேமாவின் விகாரைப் பேச்சு வெற்றுப் பேச்சே!

## விபத்தில் வண.பிதா காயம்

யாழ்ப்பாணம், ஜூலை 31

தாவடிச் சந்தியில் நேற்றுக் காலை இடம்பெற்ற விபத்து ஒன்றில் வண. பிதா சிங்கராயர் காயமடைந்து, யாழ். ஆஸ்பத்திரியில் சேர்க்கப்பட்டுள்ளார்.

அவர் செலுத்திச் சென்ற ஸ்கூட்டர் சறுக்கி விபத்துக்குள்ளானதாகத் தெரிவிக்கப்பட்டது. [ஒ-15-143]

## கடற்கரையில் பெண் சடலம்

புலோப்பளை கடற்கரையில் 38 வயது மதிக்கத்தக்க பெண் ஒருவரின் சடலம் கடந்த சனியன்று கரை ஒதுங்கியது.

சடலத்தில் காயங்கள் காணப்பட்டபோதிலும் துப்பாக்கிக்குண்டினாலோ கத்திக் குத்தினாலோ அவை ஏற்பட்டதென ஊகிக்கமுடியவில்லை.

பின்னர் சடலம் அந்த இடத்திலேயே அடக்கம் செய்யப்பட்டது. (ஒ-117)

## தமிழீழ வள கருத்தரங்கு

யாழ்ப்பாணம், ஜூலை 31

தமிழீழ வள கருத்தரங்கு இன்று பிற்பகல் 2. 30 மணிக்கு பல்கலைக் கழக செல்வநாயகம் மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

இதுவரை கலந்துகொண்ட அனைத்து விரிவுரையாளர்களையும் கருத்தரங்கில் பங்குபற்றுமாறு கேட்கப்பட்டுள்ளது. (ஒ)

## அரச அதிபர் கோரிக்கை

யாழ்ப்பாணம், ஜூலை 31

திரும்பிச் சென்றுள்ள கப்பல்களை திரும்பவும் பருத்தித்துறை துறைமுகத்திற்குக் கொண்டு வந்து, உணவுப் பொருள்களை இறக்க ஆவன செய்யுமாறு யாழ். அரச அதிபர் கொழும்பில் உள்ள அத்தியாவசிய சேவைகள் நாயகத்திடம் மீண்டும் கோரிக்கை விடுத்துள்ளார். [ஒ-5]

## குருநகரில் குடிசை வீடுகள் எரிந்து நாசம்

அடுப்பில் இருந்து பரவிய தீயினால் மூன்று குடிசை வீடுகள், ஒரு சைக்கிள் கடை ஆகியன முற்றாக எரிந்து நாசமாகின.

இச்சம்பவம் நேற்றுக் காலை குருநகர் மத்திய மேற்கு வீதி, ஐஸ்பின்ட் வீதிச் சந்தியில் நடைபெற்றது.

அங்கிருந்த உடைமைகள் யாவும் எரிந்து நாசமானதாகத் தெரிவிக்கப்பட்டது. (ஒ-5)

## பதியுமாறு கோரிக்கை

யாழ்ப்பாணம், ஜூலை 31

போர் நடைபெற்றுக் கொண்டிருக்கும் இடத்திற்கு அண்மித்த பகுதிக்குச் சென்று போராளிகளுக்கு உதவி செய்ய விரும்பும் பல்கலைக் கழக மாணவர்கள் தமது பெயர்களை வெள்ளிக்கிழமைக்கு முன் மாணவர் ஒன்றியத்தில் பதிவு செய்து கொள்ளுமாறு பல்கலைக் கழக மாணவரவை கேட்டுள்ளது. (ஒ)

## கடும் பீரங்கி தாக்குதல்

ஸ்ரீலங்கா கடற்படை விசைப் படகுகள், பீரங்கிக் கப்பல்கள் ஆகியவற்றில் இருந்து ஆழியவளை, உடுத்துறை பகுதிகளை நோக்கி கடும் தாக்குதல்கள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

இதனால் வீடுகள், கட்டடங்கள் பல சேதமடைந்துள்ளன. பெரும் எண்ணிக்கையான மரங்கள் நாசமாகியுள்ளன. (ஒ-144)

# வாழப்பாடி ராஜினாமாவை நரசிம்மராவ் ஏற்றார்!

புதுடில்லி ஜூலை 31

மத்திய தொழில் இணை அமைச்சர் பதவியில் இருந்து விலகுவதாகத் தெரிவித்து வாழப்பாடி இராமமூர்த்தி சமர்ப்பித்த கடிதத்தை, ஏற்றுக் கொள்ளுமாறு கூறும் சிபார்சுடன், பிரதமர்நரசிம்மராவ் ஜனாதிபதி வெங்கடராமனுக்கு அனுப்பி வைத்திருக்கிறார்.

இத்தகவலை சபை முதல்வரும் மனித வள மேம்பாட்டுத்துறை அமைச்சருமான அர்ஜுன் சிங் நேற்று லோக சபையில் வெளியிட்டார்

அச்சமயம் வாழப்பாடி இராமமூர்த்தி சபையில் இருந்தார்.

பின்னர் சபாநாயகர் சிவராஜ் பட்டீலின் அனுமதியுடன் வாழப்பாடி இராமமூர்த்தி சபையில் அறிக்கை ஒன்றை வெளியிட்டார்.

# ஜெயலலிதா வரவேற்பு

புதுடில்லி, ஜூலை 31

இந்திய மத்திய அமைச்சரவையில் இருந்து இணை அமைச்சர் வாழப்பாடி இராமமூர்த்தி ராஜினாமாச் செய்ததை தமிழக முதலமைச்சர் ஜெயலலிதா வரவேற்றிருக்கிறார்.

சென்னையில் இருந்து திங்கட்கிழமை புதுடில்லி சென்ற திரு. இராமமூர்த்தி, பிரதமர் பி. வி. நரசிம்மராவைச் சந்தித்து தனது பதவி விலகல் கடிதத்தைக் கொடுத்தார். பின்னர் அவர் ஜனாதிபதி வெங்கட்ராமனைச் சந்தித்துப் பேசினார்.

காவிரி நீர் பங்கீடு பற்றிய தகராறு குறித்தே அவர் பதவி விலகினார். (இ-எ)

# ராஜினாமாக் கடிதத்தை ரங்கராஜன் வாபஸ்!

புதுடில்லி, ஜூலை 31

இந்திய மத்திய சட்டத்துறை இணை அமைச்சர் ரங்கராஜன் மோகன் குமாரமங்கலம் தமது பதவி விலகல் கடிதத்தை பிரதமர் பி. வி. நரசிம்மராவின் ஆலோசனையின் மீது வாபஸ் வாங்கி விட்டார் என்று அறிவிக்கப்படுகிறது.

தாம் நேற்று மாலை பிரதமரிடம் இராஜினமாக் கடிதத்தை சமர்ப்பித்ததாகவும் எனினும் பின்னர் பிரதமர் ஏனைய சிரேஷ்ட அமைச்சர்கள் மற்றும் பதவி விலகிய வாழப்பாடி இராமமூர்த்தி ஆகியோரின் ஆலோசனையின் பேரில் தாம் அக்கடிதத்தை வாபஸ் வாங்கி விட்டதாகவும் திரு. ரங்கராஜன் குமாரமங்கலம் நேற்றுச் செய்தியாளர்களிடம் சொன்னார். (உ-எ)

## ராஜீவ் கொலை விசாரணை :

# அரச தரப்புச் சாட்சியாக நளினி நீதிமன்றத்தில்?

ராஜீவ் கொலை தொடர்பாகக் கைது செய்யப்பட்டிருக்கும் இந்தியப் பெண்ணான நளினி, வழக்கு விசாரணையில் அரச தரப்பு சாட்சியாக ("அப்ருவராக") நீதிமன்றத்தில் ஆஜர் செய்யப்படுவார் என்று இந்தியப் பத்திரிகைச் செய்திகள் தெரிவிக்கின்றன.

ராஜீவ் கொலை விசாரணை தொடர்பாக கைது செய்யப்பட்ட மற்றொரு நபரையும் இந்த வழக்கில் அரச தரப்பு சாட்சியாக ஆஜர் செய்ய கொலைச் சம்பவத்தை விசாரணை செய்து வரும் மத்திய புலனாய்க்குழு அதிகாரிகள் முடிவு செய்திருப்பதாக தெரியவருகிறது.

சந்தேகநபர்கள் அரச தரப்பு சாட்சிகளாக மாறி நீதிமன்றத்தில் உண்மையை ஒப்புக்கொண்டு சாட்சியமளித்தால் வழக்கு முடிவில் அவர்கள் குற்றவாளிகளாகக் காணப்பட்டாலும், அரச தரப்பு சட்டத்தரணிகளின் சிபாரிசின் பேரில் நீதிமன்றம் அவர்கள் குற்றத்தை மன்னித்து விடுதலை செய்வது வழக்கம்.

ஏற்கனவே சந்தேகநபரான நளினி புலன் விசாரணையாளர்களிடம் குற்ற ஒப்புதல் வாக்கு மூலம் அளித்திருப்பதாகத் தெரிவிக்கப்படுகின்றது. (உ)

# விசாரணை துரிதப்படுத்த காங்கிரஸ் கோருகிறது

ராஜீவ் காந்தி கொலை தொடர்பாக விசாரணைகள் துரிதப்படுத்தப்பட வேண்டும்.

இப்படி இந்திரா காங்கிரஸ் கட்சி கோரிக்கை விடுத்துள்ளது.

ராஜீவ் கொலையின் பின்னால் விரிவான சதி ஒன்று இருந்ததாக உள்துறை அமைச்சர் எஸ். பி. சவான் லோகசபையில் தெரிவித்தது கவலை தரும் விஷயம் என்று கூறிய காங்கிரஸ் கட்சிப் பேச்சாளர், பேராசிரியர் கே. மாத்தூர், அச்சதியின் முழு விவரமும் கண்டுபிடிக்கப்பட்டு பகிரங்கப்படுத்தப்பட வேண்டும் என்றும் கோரினார். [இ-எ]

# மேலும் ஓர் ஆணைக்குழு

புதுடில்லி, ஜூலை 31

ராஜீவ் காந்தி கொலையில் விடுதலைப் புலிகள் தவிர்ந்த வேறு வெளிச் சக்திகள் சம்பந்தப் பட்டுள்ளனவா என்பதைக் கண்டறிய மற்றொரு கமிஷன் நியமிக்கப்படவுள்ளது.

உள்துறை அமைச்சர் எஸ். பி. சவான் நேற்று மக்கள் அவையில் இத்தகவலைத் தெரிவித்தார்.

தனியான நீதியரசர் ஒருவரை கொண்டதாக இந்தக் கமிஷன் விளங்கும் என்றும் திரு. சவான் கூறினார்.

ராஜீவ் காந்தி கொலை தொடர்பாக் கைது செய்யப்பட்ட சண்முகம், காவலில் இருந்து தப்பிச் சென்று உயிரிழந்த விதம் குறித்து புலனாய்வுத்துறை அதிகாரிகள் அளித்த விளக்கம் தமக்கு முழுத்திருப்தி தரவில்லை என்றார் அவர்.

இந்தச் சம்பவம் பற்றி விசாரணை நடத்த விசேட அதிகாரி ஒருவர் நியமிக்கப்பட்டிருக்கின்றார் என்றும்—

தவறுவிட்ட அதிகாரிகள் தண்டிக்கப்படுவார்கள் என்றும் அவர் கூறினார்.

ராஜீவ் கொலை பற்றிய விசாரணையில் இதுவரை 232 பேரின் சாட்சியங்கள் பதிவு செய்யப்பட்டிருப்பதாகவும் சபையில் தெரிவிக்கப்பட்டது. ]உ-எ]

## மீனவர்கள் தப்பினர்!

வடமராட்சி கிழக்கில் அம்பன் கிராமத்திற்கு வடக்கே உள்ள கடற்பகுதியிலிருந்து ஸ்ரீலங்கா கடற்படையினர், நேற்றுமுன்தினம் அப் பகுதியில் கரை வலை மூலம் மீன் பிடித்துக் கொண்டிருந்த மீனவர்களை நோக்கி தாக்குதலை நடத்தினர். தெய்வாதீனமாக எவரும் காயமடையவில்லை. [ஒ-144]

## பாதை மாறி செல்லும் விமானங்கள்

வடமராட்சி கிழக்குப் பகுதியில் குண்டு வீசச் செல்லும் விமானங்கள் தமது வான் வெளிப் பாதையை அடிக்கடி மாற்றிக் கொள்கின்றனவாம்.

வானொலியில் எப். எம். மீற்றரில் கேட்கும் சம்பாஷணையில் இருந்து இது தெரிய வந்துள்ளதாகக் கூறப்படுகிறது. [ஒ-144]

## மக்கள்..

[1 ஆம் பக்கத் தொடர்ச்சி]

என்று ஸ்ரீலங்கா அரசு ஒப்புக் கொண்டிருப்பதே எமக்கு மிகப்பெரிய வெற்றியாகும்.

இந்த யுத்தத்தில் கடல், வான், தரை (வெட்டவெளி) என்று மூன்று ஊடகங்களிலும் சிறந்த அனுபவம், நேரடிப்பயிற்சி ஆகியவற்றைப் பெறுவதன்மூலம் நாம் மேலும் பலத்தை அடைகிறோம்.

8 ஆயிரம் அரசுத் துருப்புகள் ஒரு யுத்தத்தில் குவிக்கப் பட்டிருக்கின்றன. அவர்களுடன் நாம் நேருக்கு நேர் மோதிக் கொண்டிருக்கிறோம்.

### வெற்றி-தோல்வி பார்க்கும் நேரமல்ல

இந்த நிலையில் நாம் வெற்றி பெறுவோமா என்று மக்கள் கேட்கின்றனர். அதை விடுத்து, வெற்றி தோல்வியைப் பார்க்காமல் மக்கள் தமது வரலாற்றுக் கடமையை உணர்ந்து செயற்பட முன்வரவேண்டும்.

ஆக்கிரமிப்புக்காக சிங்களப் படை 8 ஆயிரம் துருப்புக்களைக் குவித்தால், சொந்த மண் மீட்புக்காக நாம் எத்தனை எத்தனை ஆயிரம் பேர் அணி திரளவேண்டும்?

போர்க்களத்தில் தமது இன்னுயிரைத் துச்சமென மதித்து மண்ணுக்காகப் போராடும் வேங்கைகளின் தியாகங்களை எமது மக்கள் புரிந்துகொள்ள வேண்டும்.

வேங்கைகளின் தியாகங்கள் வீணாகிப் போய்விடக் கூடாது. வீழும் துப்பாக்கிகளைத் தொடர்ந்து தூக்கிப் போராட இளைஞர்கள் அணிதிரள வேண்டும்.

ஸ்ரீலங்காப்படை நவீன ஆயுதங்களுடன், டாங்கிகள் மற்றும் விமானங்கள் போன்ற கருவிகளுடன் பெரும் பலத்துடன் மோதுகிறது.

அவர்களை எதிர்த்து நிற்கும் எமது போராளிகளிடம் இருப்பது மன உறுதியும், இலட்சிய வேட்கையும்தான்.

எமது தலைவரின் வழிகாட்டலில் உறுதியும், இலட்சிய வேட்கையும்மிக்க போராளிகளாக வளர்க்கப் பட்ட புலிகள், வீரர்களாகப் பெரும் உத்வேகத்துடன் போராடிக் கொண்டிருக்கிறார்கள்.

தங்களுக்குப் பின்னால் பெரும் மக்கள் அணியே திரண்டு நிற்கின்றது என்ற தகவலை, போர்க் களத்தில் நிற்கும் வீரர்களுக்கு எட்டச் செய்யக்கூடிய வகையில் மக்கள் அணி திரளவேண்டும். அந்தத் தகவல் ஒன்றே அவர்களை மேலும் மேலும் பலமடையச் செய்யும்; எதிரிகளைப் புறமுதுகிடப் பண்ணும்.

இது இறுதி யுத்தம் என்கிறது ஸ்ரீலங்காப்படை. இது யுத்தத்தின் ஆரம்பம் தான் என்பது அவர்களுக்குப் போகப் போகப் புரியும்- என்றார். (உ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# களத்தில் மக்களைக் காண உற்சாகம் பிறக்கின்றது!

## காயமடைந்த போராளி கூறுகிறார்

யாழ்ப்பாணம், ஜூலை 31
போர்க்களத்துக்குச் சமீபமாக எமது மக்களைக் காண்பது, இந்த யுத்தத்தில் எமக்குப் புது நம்பிக்கையையும், மனமகிழ்ச்சியையும், உற்சாகத்தையும் தருவதாயுள்ளது. அதனால் நாம் களத்தில் சோர்வின்றிப் போராடமுடிகிறது.

ஆனையிறவை நோக்கி முன்னேற முயலும் படையினருடன் நேற்று நடந்த சண்டையில் காலில் காயமடைந்து சிகிச்சை பெற்று வரும் இளம் போராளி ஒருவர் உதயனுக்கு இவ்வாறு சொன்னார்.

நேற்றுப் பிற்பகல் யாழ். ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்ட, அச்சுவேலி மேற்கைப் பிறப்பிடமாகக் கொண்ட அந்த இளம் வீரர் மேலும் தெரிவித்ததாவது:-

முன்னர் இராணுவத்தினருடன் நாம் மோதும் இடங்களில் மக்களைக் காணமுடிவதில்லை. அவர்கள் அவ்விடங்களை விட்டு வெளியேறித் தூரச் சென்றுவிடுவர். ஆனால் ஆனையிறவில் தற்போது நடக்கும் யுத்தத்தில் நிலைமை வேறு.

போராளிகளுக்கு உதவிகள் புரியவென இப்போது மக்கள் களத்துக்குச் சமீபமாக வருகிறார்கள். அவர்களைக் காணும்போது எமக்கு மகிழ்ச்சியும் உற்சாகமும் தோன்றிவிடும். சோர்வில்லாமல் போராடுகிறோம்.

வானத்தில் விமானங்களின் அணி வகுப்பு; அவை வீசும் பயங்கரக் குண்டுகள்; கடலில் நவீன ரக போர்ப் படகுகள்; அவை கக்கும் தீப்பிழம்பான குண்டுகள்; வெட்ட வெளி நிலத்தில் சிறு, சிறு பற்றைகள் தவிர்ந்த பரந்த சுடுமண்; இவற்றுக்கு மத்தியில் எதிரியை முகத்துக்கு முகம் பார்த்து மோதுகிறோம்.

கவசவாகனங்களுடன் வந்திறங்கியுள்ள மிகப் பெரிய படையை முன்னால் காண்பதும்—

சிலசமயங்களில் மிகக் கிட்டிய தூர இடைவெளியில் சுடுபட்டுக் கொள்வதும் எனக்குப் புது அனுபவமாய் இருந்தது.

காயங்களால் ஏற்பட்ட வேதனைகளுக்கு மத்தியிலும் சிரித்த முகத்துடன் இவ்வாறு கூறினார் அந்த இளம் போராளி. (அ-5)

## விமானக் குண்டு வீச்சில் எரியும் பற்றைக் காடுகள்

தாளையடி ஜூலை 31
வடமராட்சி கிழக்கு, புல்லாவெளி, முள்ளியான் பகுதிகளில் ஸ்ரீலங்கா விமானப் படையின் விமானங்கள் வீசும் குண்டுகளினால் பற்றைக் காடுகள் தீபற்றி எரிவதாக தெரிவிக்கப்படுகிறது.

வெற்றிலைக்கேணியில் இருந்து ஆனையிறவு இராணுவ முகாம் வரையிலான சுமார் 5 மைல் பிரதேசத்தில் உள்ள வெட்டவெளிகளில் காணப்படும் பற்றைக்காடுகளை அழிக்கும் முயற்சியில் விமானப் படை தீவிரமாக ஈடுபட்டிருப்பதாகத் தெரிவிக்கப்படுகிறது. (உ-144)

## உடுவிலில் மக்கள் அஞ்சலி

யாழ்ப்பாணம், ஜூலை 31
ஆனையிறவு போர்க் களத்தில் நேற்று முன்தினம் தியாய மரணமடைந்த 11 வேங்கைகளின் புகழுடல்கள் நேற்று உடுவில் மான்ஸ் பாடசாலையில் வைக்கப்பட்டிருந்தன.

தமிழ் மண் மீட்பில் வீர மரணமடைந்த அந்த வேங்கைகளுக்கு பெரும் எண்ணிக்கையான மக்கள் திரண்டு வந்து தமது கண்ணீர் அஞ்சலியைச் செலுத்தினர்.

விடுதலைப் புலிகள் பிரமுகர்களும் அங்கு அஞ்சலியுரை நிகழ்த்தினர்.

இறுதியில் புகழுடல்கள் கோப்பாயில் மாவீரர் துயில் கொள்ளும் புனித இடத்தில் தீயுடன் சங்கமமாகின.

களப்பலியான வேங்கைகளின் பெயர், விவரம் வருமாறு:-

ராஜன் [குமாரசாமி குணராசா - கொக்குவில்], சதீஸ் [க. புஷ்பாகரன் - ஆலங்கேணி], விங்கேஸ் [வன்னியசிங்கி ஜவான் ஜெயராஜ்- உப்புவெளி], செனித் [குமாரசாமி திருவேகரன்- ஏழாலை], அலிஸ்ரன் [தியாகராஜா கிருஷ்ணபாலன்- அம்பாறை], யோகன் [சின்னத்துரை கண்ணன் - சுழிபுரம்]

நிருபா [சதாருஜினி சதாசிவம் - பெரியகல்லாறு], செந்தூரன் [கந்தையா நாகேந்திரன் - அம்பாறை], காந்தரூபன் [பிரான்ஸிஸ் நெல்ஸன் - திருகோணமலை], சுலோசன் [சிற்சபை நிரஞ்சன் - தம்பலகாமம்], விநாயகன் [சித்திரவேல் மோகன்- கோவில்போரதீவு].

# மரண அறிவித்தல்கள்

## திருப்பரங்கிரிநாதன் நெல்லைநாதன்

**(பவான்) - (சிவன்)**

**ஆனையிறவு நேரடி மோதலில் வீரமரணம் அடைந்தார்.**

இவர் அ. திருப்பரங்கிரிநாதன் (அஞ்சல் அதிபர், காங்கேசன்துறை) இரதி தம்பதிகளின் அருமைப் புதல்வனும், திருத்தணிகைநாதன், செந்தில்நாதன், நரேந்திரநாதன் ஆகியோரின் அன்புச் சகோதரரும் ஆவார். ஈமக்கிரியைகள் 28 - 07 - 1991 இல் நடைபெற்றன.

தகவல்:
அ. திருப்பரங்கிரிநாதன்,
(தகப்பன்)

இமையாணன்,
உடுப்பிட்டி. (17646)

## திரு. விஸ்வலிங்கம் இராமநாதன்

**[முன்னாள் களஞ்சியப் பொறுப்பாளர், யாழ். ஐக்கிய வியாபாரச் சங்கம்]**

நீராவியடியைப் பிறப்பிடமாகக் கொண்ட திரு. விஸ்வலிங்கம் இராமநாதன் 30-7-1991 அன்று காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற விஸ்வலிங்கம், வள்ளியம்மை ஆகியோரின் அன்பு மகனும், நாகேஸ்வரியின் அன்புக் கணவரும், காலஞ்சென்ற நடராஜா, பொன்னம்மா, கண்மணி ஆகியோரின் சகோதரரும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் இன்று [31-7-91] பிற்பகல் 1-00 மணிக்கு அவரது இல்லத்திலிருந்து தகனக் கிரியைகளுக்காக கோம்பயன்மணல் மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இவ்வறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரையும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

தகவல்:
திருமதி நாகேஸ்வரி இராமநாதன்
46, பிறவுண் வீதி,
நீராவியடி, யாழ்ப்பாணம். (17463)

## ஸ்ரீலங்கா...

[1 ஆம் பக்கத் தொடர்ச்சி]

சூத்திரதாரிகள் இந்தக் கூலிப் பட்டாளமே!!

—இவ்வாறு இந்திய மத்திய புலனாய்வுப் பிரிவினருக்கு தகவல் கிடைத்திருப்பதாக ''நக்கீரன்'' வார இதழ் செய்தி வெளியிட்டிருக்கிறது.

ராஜீவ் கொலை குறித்து விசாரணை நடத்திவரும் மத்திய புலனாய்வுக் குழுவினரின் கவனம் தற்போது இந்தக் கூலிப்படை மீதும் திரும்பியிருப்பதாகத் தெரிவிக்கப்படுகிறது.

திரு. ரவி ஜெயவர்த்தனா, முன்னாள் ஜனாதிபதி ஜே. ஆர். ஜெயவர்த்தனாவின மகன் என்பது தெரிந்ததே. [உ]

## கடல்...

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

தடை முகாமின் பிற்பகுதியிலிருந்து அரை மைல் தூரத்தில் இந்த அணி நிலைகொண்டிருந்தது.

நேற்றைய தாக்குதல்களில் கடல் நீரேரிப் பகுதியால் முன்னேறிய படையினருக்கு பெரும் சேதம் ஏற்பட்டதாகத் தெரிய வருகிறது. [உ]

## இடம்பெயர்ந்த...

[1 ஆம் பக்கத் தொடர்ச்சி]

தெரிவித்தன.

நேற்றைய கூட்டத்தில் குடாநாட்டின் உணவுத் தட்டுப்பாட்டு நிலை, கப்பல்களில் இருந்து பொருள்கள் இறக்கப்படாமை, தரை வழியாக உணவுப் பொருள்களை [illegible] என்பன தொடர்பாக விவாதிக்கப்பட்டதாகத் தெரிய வருகிறது. [ஓ-5]

# 'பேட்ரியாட்' ஏவுகணைக்கும் விமானப்படை அஞ்சாதாம்!

## தளபதி குணவர்த்தன கூறுகிறார்

கொழும்பு, ஜூலை 31
விடுதலைப் புலிகள் ''பேட்ரியாட்'' என்னும் அதிநவீன ஏவுகணை வைத்திருந்தால் கூட விமானப்படையினர் அதற்கு அஞ்சாது துணிந்து போரிடுவார்கள்.

இவ்வாறு ஸ்ரீலங்கா விமானப்படையின் தளபதி ரெறன்ஸ் குணவர்த்தனா செய்தி ஏஜென்சிகளுக்குத் தகவல் தெரிவித்துள்ளார்.

விடுதலைப் புலிகளிடம் விமான எதிர்ப்புப் பீரங்கிகள் இருப்பதால், விமானத் தாக்குதல் நடத்த விமானப்படையினர் அஞ்சுவதாக வெளியான செய்திகளை அவர் மறுத்தார்.

விமானப்படையின் விமான மோட்டிகள் விமானத்தில் பறக்க மறுப்புத் தெரிவிக்கவில்லை என்றும்—

விடுதலைப் புலிகளிடம் புதுவித ஆயுதங்கள் இருக்கின்றன என கூறப்பட்டாலும், அதுகுறித்துத் தாங்கள் எதுவித கவலையும் கொள்ளவில்லை என்றும்— திரு. குணவர்த்தனா கூறியுள்ளார். [ஒ-எ]

## தனியே சந்திப்பு

மாஸ்கோ, ஜூலை 31
புஷ் — கோர்பச்சேவ் உச்சி மாநாட்டில் கலந்துகொள்ள ரஷ்ய மாநிலக் குடியரசின் ஜனாதிபதி பொரிஸ் யெல்ட்சின் மறுத்து விட்டார் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

திரு. யெல்ட்சின் அமெரிக்க ஜனாதிபதி ஜோர்ஜ் புஷ்ஷை தனியே சென்று சந்தித்துப் பேச்சுக்கள் நடத்தினார்.

# நினைவஞ்சலி



தமிழ் மண்ணில் பிறப்பு:
31 - 07 - 1968

தமிழ் மண்ணில் வீரமரணம்:
11 - 07 - 1991

## கப்டன் கஸ்தூரி

**(வசந்தி கணேசன் - ஊரெழு)**

தமிழீழம் சமைக்கப் புறப்பட்டாய்
தமிழ் மானம் காக்க களம் புகுந்தாய்
தமிழ் மண் சிவக்க தலை சாய்ந்தாய் — நீ
தமிழ் மகள் உன் வழி தொடர்வோம்!

அஞ்சுதல் நிலை மாறி ஆறுதல் உருவாக
வெஞ்சினம் கொண்டு வேங்கையாய் நீ
துஞ்சுதல் இன்றி துணிந்து சென்றாய்
ஆனையிறவில் செருக்களம் புகுந்தாய்!

உன் இலட்சியப் பயணம்
வெற்றிப் பாதையில் தொடர்கிறது
அஞ்சா நெஞ்சம் கொண்ட எம் வீரர்கள்
அங்கு புலிக்கொடி நாட்டுவது திண்ணம்.

உனது 23 ஆவது பிறந்த தினமான இன்று உன் இலட்சியம் நிறைவேற உழைத்திட உறுதி பூணுகின்றோம் நாமும்.

- குடும்பத்தினர்.
(சி/0319)

# இரண்டாம் ஆண்டு நினைவஞ்சலி



தோற்றம்:
13 – 4 – 1937

மறைவு:
22 – 7 – 1989

திதி:
31 - 7 - 1991

அமரர்

## கிருஷ்ணபிள்ளை இராசரத்தினம்

உங்கள் ஆத்மா சாந்தியடைய என்றும் இறைவனைப் பிரார்த்திக்கும்:

மனைவி, பிள்ளைகள்.

வட்டு மேற்கு,
வட்டுக்கோட்டை. [17641]

இப்பத்திரிகை நியூ உதயன் பப்பிளிகேசன் (பிறைவேட்) லிமிட்டெட்டினால் யாழ்ப்பாணம் நாவலர் வீதி, [illegible] இலக்கத்தில் உள்ள அச்சகத்தில் 31 - 7 - 1991 இல் [illegible] வெளியிடப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org